அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 02/2020

எனது இலக்கம் : EST-1/MISCL/06/0047
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2020.02.03

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும்
நியதிச்சட்டச் சபை தலைவர்கள்

<u>தரப்படுத்தப்பட்ட புவியியல் பெயர்களைப் பிரயோகித்தல்</u>

2014.12.17 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி இலங்கை புவியியல் பெயர்களின் தரப்படுத்தலிற்காக நிறுவப்பட்டுள்ள புவியியல் பெயர்களை தரப்படுத்தும் குழுவினரால் இடம்சார்ந்த பெயர்கள், இயற்கை புவியியல் அம்சங்கள்,பாதைகள் மற்றும் நீர் வழிப் பாதைகள் போன்ற கிட்டத்தட்ட ஐந்து இலட்சம் அளவு புவியியல் பெயர்களின் எண்ணிக்கை தரப்படுத்தலின் பின்னர் www.geonames.gov.lkஎன்ற இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

02. அவ் இணையத்தளத்தில் உள்ளடக்கியுள்ள தரப்படுத்தப்பட்ட அடையாளம் காணப்பட்ட புவியியல் பெயர்கள் எதிர்வரும் காலங்களில் சகல அரச நிறுவனங்களிலும் தனது கடமை நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவதன் மூலம் நிர்வாக மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகளை மிக்க பயனுறுதி மற்றும் வினைத்திறனாக மேற்கொள்வதற்கு முடியுமாக உள்ளது. மேலும் இடங்களை அடிப்படையாகக் கொண்ட சேவைகளை வினைத்திறன் மற்றும் மேம்படுத்துவதற்காக அவசியப்படும் அடித்தளத்தை இதன் மூலம் உருவாகின்றது என்பதனால் அவசியப்படும் சந்தர்ப்பங்களில் புவியியல் பெயர்களைப் பயன்படுத்துவதற்காக மேற்கூறப்பட்ட இணையத்தளத்தின் மூலம் பெயர்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

03. புவியியல் பெயர்கள் தரப்படுத்தல் தரவுத் தளத்தைப் பயன்படுத்தும் போது பெயர்கள் குறித்து ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் அப் பிரச்சினைகளை www.geonames.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக முன்வைக்க முடியும் என்பதோடு, மேலதிக விபரங்களுக்கு பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

| | |
|---|---|
| நில அளவைகள் அத்தியட்சகர் ( புவியியல் பெயர் ) | - 011-2368599 |
| சிரேஷ்ட நில அளவைகள் அத்தியட்சகர்<br>( வரைபடமாக்கல்கள் மற்றும் புவியியல் பெயர்) | - 011-2581960 |
| சிரேஷ்ட பிரதி நில அளவையாளர் நாயகம்<br>(வரைபடமாக்கல்கள் மற்றும் புவியியல் பெயர்) | - 011-2369586 |

04. இச் சுற்றறிக்கை 2018.09.04 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகளின் படி காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் உடன்பாட்டின் பேரில் வெளியிடப்பட்டுள்ளது.

ஒப்பம்./ எஸ். ஹெட்டிஆரச்சி
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.